## ஜம்மு – காஷ்மீர் மாநிலம் – பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து – பல

# விலை மதிப்பற்ற உயிர்களைப் பறித்த தீவிரவாதத் தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்! புதுடெல்லி ‘தமிழ்நாடு இல்லத்தில்’

## சிறப்பு உதவி மையம் அமைத்து முதல்வர் நடவடிக்கை!

சென்னை, ஏப். 24–

**ஜம்மு – காஷ்மீர் மாநிலம், பஹல்காமில் பல விலைமதிப்பற்ற உயிர்களைப் பறித்த தீவிரவாதத் தாக்குதல் காட்டு மிராண்டித் தனமானது என்றும் – கடும் கண்டனத்திற்குரியது என்றும் பதிவிட்டுள்ளார், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!**

**ஜம்மு–காஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் தீவிரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் 24 மணி நேரமும் இயங்கும் சிறப்பு உதவி மையம் தொடங்கப்படவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.**

*அதன் விவரம் வருமாறு:*

ஜம்மு-காஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பைசரான் பள்ளத்தாக்குப் பகுதியில் சுற்றுலாவிற்குச் சென்றிருந்த பொது மக்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்தகவலை கேள்விப்பட்டவுடன், தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாக்கும் முகமாக முதற்கட்டமாக அவர்களுக்கு தொடர்பு கொள்ள ஏதுவாக புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு உதவி மையம் தொடங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் உதவி மையம் தொடங்கப்பட்டு, 011-24193300 (Land line), 9289516712 (Mobile Number with Whatsapp) என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் அப்பகுதி மக்களின் தேவைகளை அறிந்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

இதற்காக புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல உறைவிட ஆணையாளர் (Resident Commissioner) அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், அவர்களை நேரடியாக ஜம்மு-காஷ்மீர் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதிக்குச் சென்று ஒருங்கிணைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும் தேவையான மருத்துவ வசதிகளை வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

*இச்சம்பவம் அறிந்து மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவு வருமாறு:*

**ஜம்மு – காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து, பல விலைமதிப்பற்ற உயிர்களைப் பறித்த காட்டுமிராண்டித்தனமான தீவிரவாதத் தாக்குதல் மனசாட்சியையே உலுக்குகிறது.**

**இது கடும் கண்டனத்துக்குரியது. சொந்தங்களை இழந்து தவிக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.**

**இத்தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்தோரும் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன். உடனடியாக, புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையரைத் தொடர்பு கொண்டு, ஜம்மு காஷ்மீர் மாநில அதிகாரிகளுடன் பேசி, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைத்துத் தர அறிவுறுத்தியிருக்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## போப் பிரான்சிஸ் இறுதி ஊர்வலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில்

# அமைச்சர் சா.மு.நாசர் - இனிகோ இருதயராஜ் பங்கேற்பர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஏப்.24-

**கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் பங்கேற்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில், பரிவோடும், முற்போக்குக் கொள்கைகளோடும் கத்தோலிக்கத் திருச்சபையினை வழிநடத்தி, பெரும் மாற்றங்களை முன்னெடுத்த ஆளுமையான திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவு குறித்து அறிந்து மிகவும் வேதனையடைந்ததாகத் தெரிவித்திருந்தார்.

அதோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மறைந்த போப் பிரான்சிஸ் அவர்களுக்கு நேற்று முன்தினம் (22.4.2025) இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

---



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம (22.4.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

---

## நமது பிள்ளைகளுக்கு நல்ல வீடு இல்லையே என்கிற மனக்கவலையை மாற்றி

# மகிழ்ச்சியை ஏற்படுத்தியவர்தான் தமிழக முதலமைச்சர்!

## ஆலங்குடியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை, ஏப்.24-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 10.04.2025 அன்று பல்வேறு முடிவுற்ற திட்டப் பணி களை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர், அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்ததாவது:-

கலைஞர் வீடு கட்டும் திட்டத்தினை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். வீடு வழங்கும் திட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்தினோம். ஆனால் அதன் பிறகு ஆட்சி மாற்றம் காரணமாக அ.தி.மு.க. ஆட்சியினர் இதைப் பற்றி சிந்திக்கவே இல்லை. பசுமை வீடு என்று சொல்லி அவர்கள் கட்சிக்காரர்களுக்கு ஒன்றிரண்டு பேருக்கு கொடுத்தார்களே தவிர அந்தத் திட்டத்தை 10 ஆண்டுகளாக கிடப்பில் போட்டு விட்டனர்.

இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஆக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அதே திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே அதிகமான நிதியை ஒதுக்கி உள்ளார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் தனி நபர் வீடு கட்டுவதற்கான இவ்வளவு நிதி வழங்குகின்ற ஒரு திட்டம் கிடையாது. 3.5 லட்சம் ரூபாய் நிதியை கொடுக்கின்றனர். 3500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஒரு லட்சம் வீடுகள் கட்டத் திட்டமிட்டு 50,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சட்டமன்ற கூட்டத்தொடரில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என அறிவித்துள்ளார்கள். இது முதல் கட்டம் தான். அடுத்தடுத்து தொடர்ந்து யாருக்கெல்லாம் பழுதடைந்த வீடுகள் உள்ளனவோ அவர்களுக்கெல்லாம் வீடு கட்ட அனுமதி வழங்க இருக்கிறோம்.

கஜா புயல் தாக்கப்பட்ட போது குடிசை வீட்டில் வசிப்போர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். நமக்கும் ஒரு நல்ல வீடு இல்லையே என்கிற கவலை மன வருத்தம் நமது பிள்ளைகளுக்கும் இருந்தது. அந்த மனக்கவலையை மாற்றி மகிழ்ச்சியை ஏற்படுத்தியவர் தான் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். பேரறிஞர் அண்ணா சொன்னார் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று. முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், கோட்டையில் இருந்தாலும் குடிசையில் இருக்கும் மக்கள் வாழ்வதற்காக செயல்படுவேன் என்றார்கள்.



இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகிறார்கள். அது தான் திராவிட மாடல். இத்தகைய இந்த அரசுக்கு முதலமைச்சர் அவர்களுக்கு நாம் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். அதனால் தான் இந்தியாவிலேயே நம்பர் ஒன் முதலமைச்சர் என்கிற பெயரை பெற்றிருக்கிறார்கள். இந்தியாவே இன்றைக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ன சொல்கிறார் என்று உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது.

மிகப்பெரிய தேசிய தலைவராக உயர்ந்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆளுநர் கிடப்பில் போட்ட அத்தனை மசோதாக்களையும் நிறைவேற்றுவதாக வரலாற்று சிறப்பு மிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல இந்தியாவில் உள்ள அத்தனை முதலமைச்சர்களுக்கு மான உரிமையை பெற்றுக் கொடுத்து ஒரு மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்பினை பெருமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் நமது முதலமைச்சர் அவர்கள்.

அதிகாரிகள் இந்த வீடு கட்டும் திட்டத்தில் தனிக் கவனம் செலுத்தி வீடுகளை கட்டி முடித்து அவர்கள் எல்லோரும் குடி போகின்ற வரையில் உறுதுணையாக செயல்பட வேண்டும். மேலும் அவர் கூறுகையில், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன்படி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி, மீனாங்கொல்லை பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறு அமைப்பினையும், கொத்தமங்கலம் மையம் மற்றும் கொத்தமங்கலம் கிழக்கு ஆகிய பகுதிகளில் தலா ரூ 13.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறு அமைப்புகளையும் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் புதிய ஆழ்குழாய் கிணறுகளை இப்பகுதி பொதுமக்கள் பாதுகாப்பாக நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கத்தக்குறிச்சி ஊராட்சியில், ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள உலர் கலத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடம் கட்டுமானப் பணி அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணியினை தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆலங்குடி, ஆர்.கே. மஹாலில், “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணையும் வழங்கப்பட்டது. எனவே முதலமைச்சர் அவர்களால் கிராமப்புறங்களில் வாழும் பொது மக்களின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படும் இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ரா.ஜெகதீஸ்வரி, ஆலங்குடி வட்டாட்சியர் பி. வில்லியம் மோசஸ், கே.பி.கே.டி. தங்கமணி, ஆலங்குடி தலைவர் ராசி முருகானந்தம், ஆ.பழனிக் குமார், பள்ளத்தி விடுதி நாராயணன், ஆர்.வி.செல்வம், மகேஸ்வரி சண்முகநாதன், எல்.குமார் (எ) துரைக்கண்ணு, உஷா செல்வம், ஆர்ட்டிஸ்ட் முருகேசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கத்தக்குறிச்சி ஊராட்சியில், ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள உலர் கலத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடம் கட்டுமானப் பணியினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) திருமதி.ரா.ஜெகதீஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஐ. வெங்கட்ராமன்

**ஏப்ரல் 24 (2020)**



**தி.மு.கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.**

**திருவொற்றியூர் நகர அமைப்பு துவங்கப்பட்டபோதே, அதன் முதல் செயலாளராகவும் – ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டக் கழக அவைத்தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.**

**திருவொற்றியூர் எண்ணூர் தொழிற்சங்கப் பேரவையை முதன்முதலாக துவக்கியதோடு, நகர்மன்ற துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி, சைதாப்பேட்டை நிலவள வங்கி, அறிஞர் அண்ணா பட்டுக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் இயக்குநராகவும் இருந்தவர்.**

**“திசை மாறாத பறவை” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**